# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களுக்காக இந்தியாவின் மேம்பட்ட நிதி உதவி திட்டம் விநியோகம்

இந்திய நன்கொடை உதவி திட்டங்களின் கீழ், உதவிகள் தேவைப்படும் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மேம்பட்ட நிதி உதவிகளை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் 2026 ஜூன் 02 ஆம் திகதி வழங்கிவைத்தார். 2025-26 கல்வி ஆண்டுமுதல் இந்த உதவி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

2. முன்னதாக, 2023-24 கல்வியாண்டில் இப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக இந்திய நன்கொடை உதவியின் கீழ் நிதியுதவித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பொருளாதாரப் பின்புலம் மற்றும் கல்வித் திறனின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு மாதாந்தம் 5000 இலங்கை ரூபா புலமைப் பரிசில் உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

3. இத்திட்டத்திற்கு கிடைத்த நேர்மறையான பின்னூட்டங்களை அடுத்தும் மாணவர்கள் மற்றும் பல்கலைகழக அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாகவும், 2024 டிசம்பரில் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, கிழக்கு பல்கலைக் கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களுக்கான மேம்பட்ட உதவி திட்டம் ஒன்று இந்தியாவால் அமுல்படுத்தப்படுமென பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் அறிவித்திருந்தார்.

4. 2025-26 இல் ஆரம்பிக்கும் கல்வியாண்டு முதல் இந்த மேம்பட்ட திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் முதல் கல்வியாண்டில் பயிலும் 100 பட்டப் படிப்பு மாணவர்களுக்காக மாதாந்தம் 7500 இலங்கை ரூபா வீதம் வழங்கப்பட்டு வரும் நிலையில், இது அவர்களது கற்கைநெறிக் காலம் முழுவதும் வழங்கப்படும். இந்த திட்டம் தற்போது நான்காவது ஆண்டாக வழங்கப்படுவதுடன், இப்பல்கலைக்கழகத்தில் 400 மாணவர்களுக்காக வழங்கப்படும்.

5. இந்நிகழ்வில் உரையாற்றிய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா, அவர்கள் , இந்நிதியுதவியானது கல்வி முயற்சிகளை ஊக்குவிப்பதோடு, பயனாளிகளான மாணவர்கள் கல்வி, வளர்ச்சி மற்றும் எதிர்காலம் ஆகிய முக்கியமான விடயங்களில் கவனம் செலுத்தவும் வழிவகுக்கிறது என்று வலியுறுத்தினார்.

6. இலங்கையில் கல்வித்துறை சார்ந்து இந்தியா முன்னெடுக்கும் அபிவிருத்தி பங்குடைமை அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றை சார்ந்ததாக இத்திட்டம் அமைந்துள்ளது. இவ்வாறான திட்டங்களில் ருகுண பல்கலைக் கழகத்தில் இரவீந்திரநாத் தாஹூர் கேட்போர் கூடம் அமைக்கப்பட்டமை, வட மாகாணத்தில் 79 பாடசாலைகள் புனரமைப்பு, நாடளாவிய ரீதியில் கல்வி நிலையங்களுக்காக 110 பஸ்கள் விநியோகம், தென் மாகாணத்தில் 200 பாடசாலைகளில் ஸ்மாட் வகுப்பறைகள் மற்றும் கணனி ஆய்வு கூடங்கள் அமைப்பு, வட மேல் மாகாணத்தில் பொலநறுவையில் மும்மொழிப் பாடசாலை நிர்மாணம் உள்ளிட்ட பல கல்விசார் திட்டங்கள் இவ்வாறு முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில் 9 பெருந்தோட்ட பாடசாலைகளின் மேம்படுத்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பெருந்தோட்ட பாடசாலைகளுக்காக 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைத்தல் ஆகிய திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

****

கொழும்பு
02 ஜூன் 2026